வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 751 / 2022**

வழக்கு சாட்சி **DW 1**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருகே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அருண்குமார் | தொழில் | : தனியார் கட்டுமான தொழில் |
| தந்தை பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : ஓடைப்பட்டி | வயது | : சுமார் 32 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 24.07.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

நானும், எனது தகப்பனாரும், தாயாரும் ஒரே கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறோம் என்றால் ? ஆமாம். ஒரே கூட்டுகுடும்பமாக தான் வசித்து வருகிறோம். இவ்வழக்கின் 1, 2 வாதிகளின் தகப்பனார் தான் 3-ம் பிரதிவாதி என்றால் ? ஆமாம். 1, 2 வாதிகள் இளவராக இருப்பதால் 3-ம் பிரதிவாதியின் தாயார் அடுத்த சிநேகிதி என்ற அடிப்படையில் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? ஆமாம். நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாதுகாவலர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொல்லியிருப்பது தவறு என்றாலும், அடுத்த சிநேகிதி என்ற முறையில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. வாதிகளுக்கு அவர்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைத்தாலும் அதனால் சிநேகிதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்துள்ள ஈஸ்வரி என்பவருக்கு எவ்வித பணப்பயனும் ஏற்படபோவதில்லை என்றால் ? அது தவறு. வாதிகளுக்கு தீர்ப்பாகும்பட்சத்தில் சிநேகிதி ஈஸ்வரிக்கு என்ன பணப்பலன் ஏற்படும் என்றால் ? அனைவரும் கூட்டுக்குடும்பம். அதனால் அவர்கள் குடும்பத்திற்கு தான் சொத்து சென்றடையும். நான் சொல்வது தவறு என்றாலும், வாதிகளுக்கு தீர்ப்பு ஏற்படும் பட்சத்தில் பலன்கள் அனைத்தும் வாதிகளை தான் சென்றடையும் என்றால் ? சரியல்ல. 1, 2 வாதிகளின் தகப்பனாரான 3-ம் பிரதிவாதி பூர்விக சொத்துக்களை விற்பனை செய்த தொகையை வைத்து வேறு சொத்துக்கள் வாங்கி அந்த சொத்துக்களை தான் எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் ? சரியல்ல. 1, 2 வாதிகளின் தகப்பனாரான 3-ம் பிரதிவாதி 1, 2 இளவர் வாதிகளின் நலனுக்கு எதிராகவும், 3-ம் பிரதிவாதியின் மனைவியும் இளவர்கள் நலனுக்கு எதிராக செயல்பட்டு வருவதால் 1, 2 இளவர் வாதிகளுக்கு அவரது தகப்பன் வழி பாட்டியான ஈஸ்வரி என்பவர் தான் தகுந்த நபர்

என்பதால் ஈஸ்வரி என்பவர் இவ்வழக்கினை 1, 2 இளவர் வாதிகளின் நலனை கருத்தில் கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? அது தவறு. வாதிகள் செலுத்தியுள்ள நீதிமன்றகட்டணம் தவறு என்று சொல்லியுள்ள நிலையில் எந்த வகையில் தவறு என்று சொல்லியுள்ளேன் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது வழக்குரைஞரை தான் கேட்கவேண்டும். ஏன் வழக்குரைஞரை கேட்டு நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் ? கடந்த 2019-ம் ஆண்டில் இருந்து நாட்கள் கடந்துவிட்டதால் நான் மறந்துவிட்டேன். வழக்குரையுடன் வம்சாவழி பட்டியல் உள்ளதை நான் படித்து தெரிந்துகொண்டேனா என்றால் ? ஆமாம். நான் தெரிந்து கொண்டேன். வம்சாவழிபட்டியலில் உள்ள சங்கதிகள் சரிதான். 3-ம் பிரதிவாதியின் மனைவி பெயர் எனக்கு தெரியும். பாரதி ஆகும். 1, 2 வாதிகளின் பிறந்த தேதி எனக்கு தெரியுமா என்றால் ? தேதி எனக்கு தெரியாது. 30.05.1990ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் ? நான் படித்து தெரிந்துகொள்ளவில்லை. வா.சா.ஆ,1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் பூர்விக பொதுப்பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சரத்து கண்டுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ,1 ஆவணமான பாகப்பிரிவினை பத்திரத்தில் பி செடியூலாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் துரைச்சாமி தனக்காகவும், தன் மகள் மைனர் கவிதாவிற்காகவும், 3-ம் பிரதிவாதிக்கும், சேர்த்து கூட்டாக ஒதுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வா.சா.ஆ,2 ஆவணமாக கடந்த 11.07.2006 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ? எனக்கு தெரியாது. வா.சா.ஆ,2 ஆவணத்தில் "எ" பாகத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் இவ்வழக்கு 3-ம் பிரதிவாதிக்கும், அவரது தகப்பனார் துரைச்சாமிக்கும் பாத்தியப்பட்டு அடைந்துகொள்ள வேண்டியது என்று சரத்து கண்டும், பி பாக சொத்துக்கள் கவிதா என்பவரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சரத்து கண்டு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 3-ம் பிரதிவாதி மற்றும் அவரது தகப்பனாருக்கு கூட்டாக ஒதுக்கப்பட்ட "எ" பாக சொத்தில் கண்டுள்ள சொத்துக்களில் துரைச்சாமி தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தன்னுடைய மகன் 3-ம் பிரதிவாதிக்கு கடந்த 09.04.2008ம் ஆண்டு ஒரு பாகபாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் வழியாக கிடைத்த சொத்துக்கள் 3ம் பிரதிவாதிக்கும் அவரது சட்டப்படியான வாரிசுகளான வாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் ? எனக்கு அது பற்றி தெரியவில்லை. இவ்வழக்கின் 3-ம் பிரதிவாதி தனக்கு வா.சா.ஆ,1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் வழியாக கிடைத்த சொத்தினை ஒரு மூன்றாம் நபரான குப்பணகவுண்டர் மகன் கணேசன் என்பவருக்கு கடந்த

08.05.2008ம் தேதி வா.சா.ஆ,4 ஆவணத்தின் வழியாக கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு மூன்றாம் பிரதிவாதி வா.சா.ஆ.4 ஆவணத்தின் வழியாக கிரையம் செய்த சொத்தினை குப்பணகவுண்டர் மகன் கணேசன் என்பவருக்கு எவ்வளவு தொகைக்கு சொத்தினை விற்பனை செய்த விபரம் எனக்கு தெரியாது என்றால் ? எனக்கு தெரியாது. மீதமுள்ள சொத்துக்களை இவ்வழக்கு 3-ம் பிரதிவாதி கடந்த 31.07.2008ம் தேதி வா.சா.ஆ.5 ஆவணத்தின் தன்மைப்படி பொன்னுச்சாமிகவுண்டர் மகன் ராமசாமிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணத்தின் வழியாக எவ்வளவு தொகைக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் ? சரிதான். வா.சா.ஆ,4 மற்றும் வா.சா.ஆ,5 ஆவணங்கள் வழியாக 3-ம் பிரதிவாதி கணேசன் மற்றும் ராமசாமிக்கு விற்பனை செய்த சொத்துக்களின் சந்தை மதிப்பு மற்றும் அரசு வழிகாட்டு மதிப்பு தெரியாது என்றால் ? எனக்கு அது பற்றி தெரியவில்லை. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் கண்ட சொத்துக்களை 3-ம் பிரதிவாதி வழிகாட்டு மதிப்பின் படி கிரையம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தாலும் அந்த சொத்திற்கு சந்தை மதிப்பு தொகையான ரூ.23,50,000 தொகையினை 3-ம் பிரதிவாதி ரொக்கமாக பெற்றுக் கொண்டார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளுக்கு அடுத்த சிநேகிதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்துள்ள சிநேகிதி ஈஸ்வரிக்கு எந்த சொத்தும் கிடையாது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. (குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.24 17:07:26 +0530